# அடுத்த ஆண்டுகுள் சிங்களத்தில் தேர்ச்சி:

Registered as a Newspaper in Ceylon ... லே சதம் 10

# ஈழநாடு

EELA NADU

தபாற் பெட்டி எண் : 49

மலர் ௨ இதழ் 56

போன் 389 National Tamil Daily தேசிய தினசரி

யாழ்ப்பாணம் பராபவபங்குனி24 ஜுல்ஹஜ் 26 வெள்ளிக்கிழமை [7-4-67]

## அரசாங்க சேவைக் கமிஷன் விடுத்துள்ள அறிக்கை

கொழும்பு, புதன் அரசாங்க சேவையிலுள்ள எல்லா புதிய ஊழியர்களும் அடுதத ஆண்டுக்குள் தமது சிங்கள தகுதிப் பரீட்சைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவேண்டும். தவறினல் அவர்கள் சேவையிலிருந்து நீக்கப்படுவார்கள்.

இந்த அறிவித்தலை அரசாங்க சேவைக கமிஷன் விடுத்திருக்கின்றது.

புதிய ஊழியர்கள் 1963-ம் ஆண்டுக்கு முன்னர் சேர்ந்தவர்கள் என்றும் 1963-ம்ஆண்டுக்குப்பின்னர் சேர்ந்தவர்கள் என்றும் பிரிக்கப்பட்டுள்ளனர்.

1963-ம் ஆண்டுக்கு முன்னர் சேர்ந்தவர்கள் தங்களின் சிங்களகத்தேர்ச்சி பரீட்சையை பூர்த்திசெய்து கொண்டபின்னர் நிறுத்தப்பட்ட சம்பள உயர்வை பெறுவார்கள். 1963-ம் ஆண்டுக்குப்பிறகு சேர்ந்தவர்கள் சிங்கள தேர்ச்சி பரீட்சையைப் பூர்த்திசெய்

[6-ம் பக்கம் பார்க்க]

# இராணுவத்தினர் மீது நடவடிக்கை எடுக்கப்படும்

## கைதான பொலிஸ் அதிகாரிக்கு ரிமாண்ட்

யாழ்ப்பாணம், வெள்ளி இளம் பெண் ஒருவருடன் தகாத முறையில் நடந்து கொண்டாரென்றசந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டவவனியா பொலிஸ் நிலைய சப் இன்ஸ்பெக்டரான திரு. ஒஸ்கார் பெரேரா இம் மாதம் 12ம் திகதி வரை றிமாண்டில் வைப்பதற்காக நேற்றுக் காலை யாழ்ப்பாணம் சிறைச்சாலைக்குக் கொண்டு வரப்பட்டார். இவருடன் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்டதாகக்கருதப்படும்வவனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த மற்றொரு பொலிஸ் ஊழியரை அடையாளம் காண்பதற்காக நடைபெறவிருக்கும் அடையாள அணிவகுப்பில் கலந்து கொள்ள திரு. பெரேராவும் வவனியா கொண்டு செல்லப்படுவார்.

சம்பந்தப்பட்ட பார்வதி தன்மீதுவேறுசிலர்பலாத்காரம் பிரயோகிக்க எத்தனித்ததாகப் புகார் செய்ய வவனியா பொலிஸ் நிலையத்திற்குச் சென்றபோதே இச்சம்பவம் நடைபெற்றதாக பொலிஸ் விசாரணையின் போது தெரிய வந்துள்ளது.

இது சம்பந்தமாக தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கும் திரு. பெரேரா

[6-ம் பக்கம் பார்க்க]

## எம். பி.க்கு நிரந்தரக் காரியதரிசி உறுதி

யாழ்ப்பாணம், வெள்ளி வல்வெட்டித்துறையில் நடந்த இராணுவத் தாக்குதல் சம்பந்தமாக பருத்தித்துறை எம். பி. திரு. க. துரைரத்தினம், நிரந்தரக் காரியதரிசி திரு. சமரசிங்காவை நேற்று மாலை பேட்டி கண்டபோது வடபகுதியில் இராணுவத்தினரின் தாக்குதல் அதிகரித்து வருவதாகவும், இதனை தடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

### 'ஈழநாடு' புத்தாண்டுமலர்

'ஈழநாடு' 14-4-67 இதழ் புத்தாண்டு மலராக கவிதை, கட்டுரைகளுடன் வண்ண முகப்புடன் வெளிவருகிறது.

மேலதிக பிரதிகள் வேண்டும் ஏஜண்டுகள் விநியோகப் பகுதியுடன் முன்கூட்டியே தொடர்பு கொள்ளவும்.

## புதிய கட்சி உள்ளூராட்சி தேர்தலில் போட்டியிடும்?

### செல்வாக்கைப்பரீட்சிக்க வாய்ப்பு

யாழ்ப்பாணம், வெள்ளி புதிதாக ஆரம்பிக்கப்படவிருக்கும் அரசியல் கட்சியான 'ஈழத்தமிழர் விடுதலை இயக்கம்' ஸ்தலஸ்தாபன தேர்தல்களில் போட்டியிடுமெனக்கூறப்படுகிறது.

தமிழ்மக்கள் மத்தியில் கட்சிக்குள்ள செல்வாக்கை அறியச் செய்வதற்கு ஸ்தலஸ்தாபன சபைத் தேர்தல்களில், குறிப்பாக யாழ்ப்பாணம் மாநகரசபை, மட்டக்களப்பு மாநகரசபை தேர்

(2-ம் பக்கம் பார்க்க)

சிங்கம் மார்க் சந்தனாதித் தைலம்

யாழ்ப்பாணப் பகுதி ஏஜன்ட் எஸ். எம். எஸ். & பிரதர்ஸ், கே.கே.எஸ். ரோட், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

சமயத்தின் லட்சியமென்ன? மனித வாழ்க்கையையும் உணர்ச்சியையும் தெய்வீகவாழ்க்கையாகவும் உணர்ச்சியாகவும் உயர்த்துவதே. வெறும் மூச்சும் பேச்சும்மட்டும்போதா. முற்றிலும் தெய்வீகத்தில் வாழ உண்மையான ஆர்வம் கொள்ள வேண்டும்.

—சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: EELANADU Jaffna
Post Box 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பராபவ ஞு
பங்குனி மீ 24உ (7-4-67)


## பார்லிமெண்டில் மும்மொழி

மக்கள் பிரதிநிதிகள் சபையில், பிரதிநிதிகள் சிங்களத்தில் நிகழ்த்தும் பேச்சுக்களை தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தும் தமிழ்ப்பேச்சுக்களை சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழி பெயர்த்தும், சபைநடவடிக்கைகள் பதிவு செய்யப்படும் 'ஹன்சார்ட்' அறிக்கையில் வெளியிட உடனடியாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றுகிளிநொச்சி எம். பி. கொண்டுவந்த தனிநபர் பிரேரணையொன்று பிரதிநிதிகள் சபையில் நிறைவேற்றப்படாது போய்விட்ட போதிலும் அதன்மீது நடைபெற்ற விவாதம் பயனுள்ள நடவடிக்கைகளுக்குவழிகாட்டுவதாக உள்ளது.

'ஹன்சார்ட்' அறிக்கையை இப்பொழுது கையில் எடுத்துப் பார்த்தால் 'கண்ணிருந்தும்குருடராக' இருக்கவேண்டியுள்ளது, பெரும்பாலும் சிங்கள எழுத்துக்களையே காணக்கூடியதாயிருக்கும் அந்த அறிக்கையில்ஆங்கிலமும் இடம்பெற்றிருக்கும். தமிழ் எப்பொழுதாவது இடையிடையே இடம்பெற்றிருக்கும். நமது தமிழ்ப் பிரதிநிதிகள்தமிழில்அதிகம் பேசாததுதான் இதற்குக் காரணமென்று கூறலாம். தமிழ்ப் பேச்சுக்குக் காது கொடுக்காதவர்களும் தமிழ்விளங்காதவர்களும் உள்ள இடத்தில் தமிழில் அதிகம்பேசிப்பயன்என்ன என்று தமிழ்ப் பிரதிநிதிகள் கேட்கலாம். இதில் நியாயமுமிருக்கிறது. தமிழில் பேசினாலும் சரி, சிங்களத்தில் பேசினாலும் சரி தாங்கள் தெரிவுசெய்து அனுப்பிய தங்கள் பிரதிநிதிகள் சபையில் என்ன பேசுகிறார்கள், நாட்டை ஆட்சிசெய்யும் மந்திரிகள் என்ன சொல்கிறார்களென்பதை அறிந்து கொள்வதற்கு மக்களுக்கு உரிமை இருக்கிறது. அவர்களுக்கு அந்த வாய்ப்பும் வசதியும் அளிக்கப்பட வேண்டும். சபையில் ஓர் அங்கத்தவர் சிங்களத்தில் அல்லது தமிழில் பேசினால் அதை ஆங்கிலத்திலும்தமிழ்அல்லது சிங்களத்திலும் உடனுக்குடன் ஒரே சமயத்தில் மொழிபெயர்ப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. இதுமுழுக்க முழுக்க வெற்றியளிக்கவில்லையாயினும் ஓரளவாவதுபயனளிக்கிறது. இதேபோல் சபையில் இல்லாத அங்கத்தவர்களும் பொதுமக்களும் சபையில் நிகழ்த்தப்படும் பேச்சுக்களையும் கேள்விகளுக்கு மந்திரிகள் அளிக்கும் பதில்களையும் அறிந்துகொள்வதற்கு சபை நடவடிக்கைகள் அனைத்தும் 'ஹன்சார்ட்'டில் மும்மொழியிலும் வெளியிடப்படவேண்டும். இது அவசியமும்கூட. இதன் அவசியத்தை நாம் இதேபத்தியில் பல மாதங்களுக்கு முன்னரே எடுத்துக்காட்டியிருந்தோம்.

கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இதை தனிநபர் பிரேரணையாக, ஜனப்பிரதிநிதிகள் சபையில் கொண்டுவந்தது பாராட்டத்தக்கது; வரவேற்கத்தக்கது. தமிழுக்கே இடமில்லை என்று கூறிய சில அங்கத்தவர்கள்கூட தமிழ்ப் பேச்சுக்களைச் சிங்களத்தில்பெயர்த்தும், சிங்களப் பேச்சுக்களைத் தமிழில் பெயர்த்தும், 'ஹன்சார்ட்'டில் வெளியிடுவதை வரவேற்றும் ஆதரித்தும் இருக்கின்றனர். இதுநல்ல அறிகுறி. ஆங்கிலத்துக்கும் இடம் கொடுப்பதையே அவர்கள் எதிர்க்கின்றனர். ஆங்கிலக் கல்வியின் தரத்தை உயர்த்தவும், கல்வியில் ஆங்கிலத்துக்கு முக்கியத்துவம் அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. பார்லிமெண்ட் நடவடிக்கைகளை விபரமாக அறிவதற்குப் பொதுமக்கள் பலரும் ஆங்கிலப் பத்திரிகைகளையே வாங்குகின்றனர். இந்நிலையில் ஆங்கிலத்துக்குஇடமளிக்கக்கூடாது என்பதில் அர்த்தமிருப்பதாகத் தெரியவில்லை. ஆயினும் தமிழ்ப்பேச்சுக்களை சிங்களத்திலும் சிங்களப் பேச்சுக்களைத் தமிழிலும் வெளியிடவேண்டுமென்பதை எதிர்க் கட்சியினர்ஆதரித்ததே பெரிய காரியம்; அது சுபசகுனமும்கூட.

சபையில் கோரமில்லாத காரணத்தால் பண்டிதர் இரத்தினத்தின் பிரேரணை நிறைவேறவில்லை. ஆயினும் எதிர்க் கட்சியினரின் ஆதரவு கிடைக்குமென்பது தெரிந்தபின் அரசாங்கமே இதை இனித்தாமதமின்றிச்செய்ய முன்வரவேண்டும்.

ஆசிரியருக்குக்கடிதங்கள்

## வெங்காயத்தில் பாகுபாடா?

யாழ்ப்பாணக் குடா நாட்டில் விளைவிக்கப்படும் வெங்காயத்தை ஒவ்வோர் பல நோக்கு கூட்டுறவுச்சங்கங்களின் மூலம் கூட்டுறவு விளைபொருள் சமாஜத்தினர் கொள்முதல் செய்துவருகின்றனர். எத்தனையோ சங்கங்கள் ஒருமுறைதன்னும் கொடுக்காமல் இருக்க சில சங்கங்கள் நான்குமுறைக்கு மேல் சொடுக்க வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளன. இதனால் தரம்குறைந்த வெங்காயம் ஏற்றுமதிசெய்வதுடன் பல ஊழல்கள் நிறைந்த வேலைகள் நடைபெற இடமேற்படுகிறது. வெங்காயம் கிண்டி ஒருமாதமாகியும் எடுக்காது ஒரு கூட்டுறவுச் சங்கம் இருக்க பக்கத்தேயுள்ள வேறு கூட்டுறவுச் சங்கம், வெங்காயம் தோட்டத்திலிருந்து கிண்டக் கிண்டவே கொள்முதல்செய்கின்றது. இது பாரபட்சமான செயலாகும். இதில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம்செலுத்துவார்களா?

க. வா.

சுழிபுரம்.

## சுதேசிய தின விழா

யாழ்ப்பாணம், வெள்ளி

சுதேசிய தினவிழாவை இம்முறையும் சிறப்பாகக் கொண்டாட அரியாலைவிளையாட்டுக் கழகத்தினர் விரிவான ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

இம்மாதம் 9-ம் திகதியிலிருந்து 14-ம் திகதிவரை நடைபெறும் இவ் விழாவில் விளையாட்டுப் போட்டிகளும் இசை நடன நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## சிங்கள ஆசிரியர் நியமனம்

நயினாதீவுப் பாடசாலைகளுக்குச் சிங்கள ஆசிரியர்களை நியமிப்பதைப் பற்றி செய்தி வெளி வந்தது. இந்த விஷயத்தில் தீவுப் பகுதிப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வ. நவரத்தினம், வடமாநில வித்தியாதிபதி திருமதி இரத்தின நவரத்தினத்தை குறை கூறுவதிலோ அல்லது கடிதத்தை வாபஸ் பெறச் சொல்வதிலோ அர்த்தமில்லை.

ஏனெனில் எங்கள் கிராம சபை தான் சிங்கள ஆசிரியர்களை நியமிக்கும்படி கோரியது. எங்கள் கோரிக்கையின் பேரில் வடமாநில வித்தியாதிபதி அந்தப் பாடசாலைகளின் பெற்றோர் - ஆசிரியர் சங்கங்களின் அபிப்பிராயத்தைக் கேட்டதில் தவறில்லை.

சி. க தம்பையா,
கிராமசபைத் தலைவர்.
நயினாதீவு.

## கால்நடைகளுக்கு தொற்றுநோய்

சுழிபுரம், வியாழன்

சுழிபுரம் மேற்கு இருத்தலடிப்பகுதியில் நேற்றும், நேற்றுமுன்தினமும் நாலு கால்நடைகள் இறந்துவிட்டன. இன்னும் பல கால்நடைகள் நோயால் பாதிக்கப்பட்டுள்ளன. இத் திடீர் நோய்க்கான காரணம் தெரியவில்லை. இதுபற்றி யாழ்ப்பாணம் கால்நடை நோய் தடுப்புஉத்தியோகத்தரிடம் முறையிடப்பட்டுள்ளது.

## காப்புறுதி தாபன வேலை நிறுத்தம் 38வது நாள்

கொழும்பு, வெள்ளி

காப்புறுதிக் கூட்டுத்தாபன வேலை நிறுத்தம் இன்றுடன் 38 நாளாகத்தொடர்கிறது.

இது பற்றிச் செனேட் சபையில் கேள்வி கிளப்பப்பட்டபொழுது, இவ்வேலைநிறுத்தம் ஏன் நீடிக்கிறது என்பது பற்றி இலங்கை வர்த்தக சிப்பந்திகள் சங்கமே பதிலளிக்கமுடியுமென வர்த்தக மந்திரி டாக்டர் எம். பி. பீரிஸ் கூறினார்.

## நெற்பயிருக்கு 17,000 ஏக்கர்

கொழும்பு, வியாழன்

கல்ஓயாப் பள்ளத்தாக்கிலுள்ள அம்பலன் ஓயாக்குளத்தின் வலது கரை வாய்க்காலைக்கட்டுவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு காணி, நீர்ப்பாசன மின்சக்தி மந்திரி திரு. சி. பி. டி. சில்வா, ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்திசபையைப் பணித்துள்ளார். இது 17,000 ஏக்கர்காணியை நெற்பயிற்செய்கையின் கீழ் கொண்டு வரும்.

## சென்னைகருகே அணுமின்சார நிலையம்

சென்னை, ஏப்ரல் 6

சென்னைக்கருகேயுள்ள சல்பாக்கத்தில் 104 கோடி ரூபா செலவில் அணுமின்சார நிலையம் ஒன்று அமைக்கப்பட விருக்கிறது. இந்த மின்சார நிலயத்தை பாரத [illegible] பார்கள்.

## புதியகட்சி ..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

தல்களில் போட்டியிடுமென அறியப்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் முஸ்லிம் வட்டாரங்கள் தவிர்ந்த மிகுதி வட்டாரங்கள் சிலவற்றில் புதிய கட்சி போட்டியிடுமென்றும், இதேபோல் மட்டக்களப்பிலும் சில வட்டாரங்களில் போட்டியிடுமென்றும் தெரியவருகிறது.

முன்னாள் யாழ். மாநகர சபை அங்கத்தவர்களில் சிலர் புதிய கட்சியில்சேர விருப்பம் தெரிவித்திருப்பதாகவும், முன்னாள் மேயர் ஒருவரைஎதிர்த்துப்போட்டியிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுவருவதாகவும் அறியப்படுகிறது.

கட்சியின் கொடிவிஷயத்தில் இன்னும் எவ்வித முடிவும் செய்யப்படவில்லை என்றும், இரு வர்ணங்களைக் கொண்ட கொடியை, கட்சிக் கொடியாக அங்கீகரிக்க வேண்டுமென கட்சியிலுள்ள வாலிபர்கள் சிலர் வற்புறுத்தியுள்ளனரென்றும் தெரிகிறது

## ஐயாறன் எழுதுகிறார்

நமது கோவில்களிலுள்ள விக்கிரகங்களுக்கு அமெரிக்காவில் இப்போது நல்ல கிராக்கியாம். ஒரு பிள்ளையார் விக்கிரகத்துக்குப் பத்தாயிரம் பவுண் கொடுத்து வாங்கியுள்ளார் நியூயார்க்கைச் சேர்ந்த பிராண்டே! லண்டனில் இந்து விக்கிரகங்கள் விற்பனையிலே இரண்டே நாட்களில் 66 ஆயிரம் பவுணுக்கு மேல் கிடைத்துள்ளனவாம்.

குப்தர் காலத்து குபேர விக்கிரகத்தை 1,050 பவுண் கொடுத்து வாங்கியுள்ளது நியூயார்க்கிலுள்ள ஒரு கண்காட்சிச்சாலை. சிவகாமசுந்தரியுடன் கூடிய நடராஜப் பெருமானின் விக்கிரகத்தை 8,500 பவுண் கொடுத்து கிளார்க் என்பவர் வாங்கியுள்ளார்.

சண்டேசுரர் விக்கிரகத்துக்கு என்ன விலை தெரியுமா? 6,600 பவுண்! வாங்கியவர் பெயர் ஐவன்பர்க். சென்னையிலிருந்து விற்பனைக்குச் சென்ற பார்வதி விக்கிரம் ஒன்று 6,000 பவுணுக்கு விலைபோயுள்ளது. ஜெயின் தீர்த்தங்காரா விக்கிரகத்துக்கு 2,500 பவுண் கொடுத்து வாங்கியுள்ளார் பிராண்டே என்பவர்.

இந்த விபரங்கள் 'பாரத் ஜோதி' என்ற இந்தியப் பத்திரிகையில் வெளியாகியுள்ளன. அமெரிக்கா உள்ளிட்டு மேலைநாட்டினருக்கு, இந்து விக்கிரகங்கள்மீது எவ்வளவு மதிப்பும் மோகமும்! இல்லாவிட்டால் இவ்வளவு விலைகொடுத்து வாங்குவார்களா?

ஃ ஃ ஃ

தமிழகத்துக்குச் சென்றிருந்தபோது ஒரு பாடல் பெற்ற ஸ்தலத்துக்குச் சென்றேன். அங்கு சில விக்கிரகங்கள் களவுபோய்விட்டதாயும், மற்ற விக்கிரகங்களை மிகவும் பத்திரமாக வைத்திருப்பதாகவும் சொன்னார்கள். ஆனால் அடுத்த வாரம் அதே கோவிலிலிருந்து விக்கிரகங்கள் மேலும் களவுபோனதாகப் பேப்பரில் பார்த்து வியப்புற்றேன்.

இந்த விக்கிரகங்களெல்லாம் எங்கே செல்லுகின்றனவென்ற ரகசியம் இப்போதுதான் விளங்குகிறது. போர்ச்சுக்கீயர் வந்து நமது புனித விக்கிரகங்களை உடைத்தார்கள் அல்லது சிதைத்துக் கடலில் போட்டார்கள். இந்து மதத்தை இதனால் அழித்துவிடலாம் என்று நினைத்தனர்போலும். ஆனால் இப்போது நமது புனித விக்கிரகங்களை மேலைநாடுகளில் பல்லாயிரக் கணக்கான பவுண் கொடுத்து வாங்குவதைப் பார்க்கையில், நிலைமை எவ்வளவு மாறியுள்ளதென்பதை உணரலாம்.

சில நாட்களுக்கு முன் இங்கு ஒரு கோயிலில் அழகான பல விக்கிரகங்களைப் புளிக்காப்பு செய்து பளபளவென்று சுத்தமாக வைத்திருந்தார்கள். துணி இன்னும் கட்டாமலிருந்ததால் விக்கிரகங்களின் வனப்பை கிட்டச் சென்று பார்க்கும்படி கூறினார் குருக்கள். [பல விக்கிரகங்களுக்கும் சிற்பியே தன் கைத்திறத்தினால் ஆடை அணிவித்திருப்பதுகுறிப்பிடத்தக்கது] அவற்றைப் பார்க்கப் பார்க்க எவ்வளவு அழகு! கலைத்திறமை அறிந்த மேலைநாட்டினர் நம் விக்கிரகங்களுக்கு இவ்வளவு விலைகொடுத்து வாங்குவதிலிருந்து, நமது சிற்பக் கலைஞர்களின் பெருமையை உலகம் உணர்ந்துவருவதாகத் தெரிகிறது.

[4-ம் கலம் பார்க்க]

[5-ம் கலத் தொடர்ச்சி]

இது மகிழ்ச்சியும் பெருமையும் அளிப்பதாக இருப்பினும், நம் கோவில் விக்கிரகங்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது பெரிதும் கவலையளிப்பதாகும். இப்போதும் அழகான விக்கிரகங்களை வார்க்கும் சிற்பிகள் இந்தியாவிலும் இலங்கையிலும் பலர் உள்ளனர். ஆகவே வெளிநாடுகளில் அதிக கிராக்கியுள்ளதை முன்னிட்டு, அரசாங்கமோ அல்லது தனிப்பட்டவர்களோ அழகான விக்கிரகங்களைப் பார்த்து ஒழுங்கான வியாபாரம் செய்தால் என்ன? அன்னியச் செலாவணி கிடைப்பதுடன், கோவில் விக்கிரகங்களுக்கு ஆபத்து ஏற்படாமல் இருக்கும். ஆனால் பழைய விக்கிரகங்களுக்குத்தான் அதிக கிராக்கியாயின், அவற்றைப் பழையதாகச் செய்வது சாத்தியம்தானே!

ஃ ஃ ஃ

வண்ணை சிவன்கோவிலில் நாதசுரசேவை செய்துவந்த ராமையா அவர்கள், நேற்று முன்தினம் இடியப்பம் சாப்பிட்டபின் திடீரென நெஞ்சு அடைத்து ஆஸ்பத்திரியில் காலமானதைக் கேட்க மிக வருந்தினேன். அன்றும்கூட அவர் கோவில் பூசைக்கு வாசித்தார். திருவிழா முழுதும் அவர் தமது புதல்வருடன் நல்ல சேவை செய்தார். கோவில்மேளம் என்று ஒருவித அலட்சியமாகக் கூறுவதுண்டு. ஆனால் அவரது இனிமையான வாசிப்பு உயரிய கலைத் திறனுடன் கூடியதாகும். அவர் தமது புதல்வருக்கு இக்கலையை அரும்பாடுபட்டுக் கற்பித்துச் சென்றுள்ளது ஓரளவு ஆறுதல் அளிப்பதாகும்.

ஃ ஃ ஃ

மன்னே மறவாதே நினைக்கின்றேன் மனத்துன்னைப்,
பொன்னே மணிதானே
வயிரம்மேபொருதுந்தி,
மின்னார் பெண்ணைத்
தென்பால் வெண்ணெய்
நல்லூரருட்டுறையுள்,
அன்னே உனக்காளாய்இனி
அல்லேன்எனலாமே.

—சுந்தரமூர்த்திசுவாமிகள்.

[தலைவனே, கரையை மோதி. பொன்னும் மணியும் வயிரமும் ஆகிய இவற்றைத் தள்ளிக்கொண்டு, ஒளிமிக்கு வருகின்ற பெண்ணையாற்றின் தென்பால் உள்ள திருவெண்ணெய் நல்லூரின் கண்ணதாகிய அருட்டுறைத்திருக்கோயிலின் கண் எழுந்தருளியுள்ள தாய் போன்றவனே, உனக்கு நான் முன்பே அடிமையாகி, இப்பொழுது 'அடியவன் அல்லேன்' என்று எதிர் வழக்குப்பேசியது பொருந்துமோ! இனிமேல் உன்னை என் மனதில் ஒருபோதும் மறவாமலே நினைப்பேன்.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்க உபஜனாதிபதியை கொலை செய்யச் சதி

## மேற்கு ஜெர்மனியில் பதினொரு பேர் கைது

பொன், ஏரப்ல் 6

**அமெரிக்க உப ஜனாதிபதி திரு. ஹம்ப்ரியைக் கொலை செய்ய மேற்கு ஜெர்மனியில் சதிமுயற்சி நடைபெற்றதாக அறிவிக்கப்பட்டது. இது சம்பந்தமாக மேற்கு ஜெர்மன் பொலிஸார் 11 பேரைச் சந்தேகத்தின்மீது கைதுசெய்துள்ளனர்.**

கைது செய்யப்பட்டவர்களில் அதிகமானோர் மாணவர்களெனத் தெரிவிக்கப்பட்டது.

திரு. ஹம்ப்ரி இங்கு பிரதமர் டாக்டர் கெய்சிங்கருடன் அணு ஆயுதத் தடை மற்றும் அமெரிக்கா, மேற்கு பெர்லின் ஆகிய நாடுகளுக்குப் பொதுவான விஷயங்கள் குறித்துப் பேச்சுவார்த்தை நடத்தி இருநாடுகளின் நட்புறவை வலுப்படுத்தும் முயற்சியில் இங்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இவரைக் கொலைசெய்யத் திட்டமிட்டிருந்த கோஷ்டியினரின் வீடுகள் பொலிஸாரால் சோதனையிடப்பட்டபோது கைக்குண்டுகளும் பயங்கர ஆயுதங்களும் கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## "சமாதான முயற்சிகளில் வெற்றி கிடைக்கவில்லை"

### வியட்னும் நிலைமை பற்றி யுதாண்ட்

ஜெனிவா, ஏப்ரல் 6

**வியட்னுமில் நிலைமை முன்னரிலும் பார்க்க மோசமாகிக்கொண்டு வருவதாகவும் சமாதான முயற்சியில் வெற்றி கிடைக்கவில்லை எனவும் ஐ. நா. தலைமைக் காரியதரிசி யுதாண்ட் கவலை தெரிவித்துள்ளார்.**

அவர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் ஒரு வருடத்துக்கு முன் இருந்த நிலைமையைவிட இப்போது நிலைமை மோசமாகியிருப்பதாகவும், சமாதான முயற்சியில், போரில் சம்பந்தப்பட்டவர்கள் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையில்லாதிருப்பதே இந்த நிலைமைக்குக் காரணமெனவும் தெரிவித்துள்ளார்.

### இயந்திரங்களுக்கு தங்கப் பதக்கம்

லயிப்சிக், ஏப். 6

இம்மாதம் நடைபெற்ற லயிப்சிக் [ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு] பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்த மணிக்கு 26,000 மிட்டாய்ப் பொட்டலங்களைச் சுருட்டும் இயந்திரத்துக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. இது ஜெர்மன் ஜனநாயகக் குடியசுசில் உற்பத்திசெய்யப்பட்ட இயந்திரம்.

### இந்திராவின் கோபம்

புதுடில்லி, ஏப்ரல் 6

தமது பெயரைக்கெடுப்பதற்கு இடைவிடாது முயற்சிமேற்கொள்ளப்பட்டுவருவதாகவும் இதனை எவ்வளவு காலம் அனுமதிப்பது என்பது பற்றி சபை தீர்மானிக்க வேண்டுமெனவும் நேற்று லோக சபையில் பிரதமர் இந்திரா தெரிவித்தார்.

ராஷ்டிரபதி உரைக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

### 'கேலிக் கூத்து

மாஸ்கோ, ஏப். 6

தென்வியட்னும் கிராமத்தில் பொதுத்தேர்தல் நடத்துவது கேலிக்கூத்தாகஇருப்பதாக ரஷ்யா வர்ணித்துள்ளது.

வியட்னுமில் அமெரிக்கத் துருப்புக்கள் நிலைகொண்டிருக்கும்போது இவ்வித தேர்தல் அர்த்தமற்றது எனவும் ரஷ்யா தெரிவித்துள்ளது.

### வழிமறித்தவர் ரிமாண்டில்

யாழ்ப்பாணம், வியா.

பெண்ணை வழிமறித்து மானபங்கப்படுத்த முயற்சித்ததாகச் செய்யப்பட்ட புகாரைத்தொடர்ந்து கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மணியம் என்பவர் நேற்றுக்காலை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஜனுப் ஜமீல் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டார்.

ஒவ்வொரு மாதமும் கோர்ட்டில் ஆஜராகும்படி ஏற்கனவே இந்நபருக்கு உத்தர விடப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது. மாஜிஸ்டிரேட் சந்தேகநபரை 7-ம் தேதிவரை ரிமாண்டில் வைக்க உத்தரவிட்டார்.

### பூடு பிரச்னை

பண்டத்தரிப்பு, வியாழன்

வெள்ளைப்பூடு பெறுவதில் இப்பகுதியில் கஷ்டமேற்பட்டுள்ளது. பொதுமக்கள் கடைகளில் வெள்ளைப்பூடு வாங்கமுடியாததால் அயலூர் கிராமங்களுக்குச் செல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளது. ஒரு ருத்தல் வெள்ளைப்பூடு ஐந்து ரூபா விலைக்கு [illegible] ளதாம்.

### சச்சிதானந்த சுவாமிஜிக்கு வரவேற்பு

யாழ்ப்பாணம், வெள்ளி

"தூய்மையான உள்ளத்திலிருந்து பிறக்கும்வார்த்தைகள் சிறந்த பக்திவாய்ந்தவையாகவிருக்கும். அந்த வார்த்தைகளில் உண்மையும் அன்பும் நிரம்பியிருக்கும். சுவாமி சச்சிதானந்தஜியின் உள்ளத்திலிருந்து பிறக்கும் வார்த்தைகளும் இதே மகிமை வாய்ந்தவைகளாகும். சுவாமி ஜிக்குக் கிடைத்திருக்கும் இப்படியான தபோவன வாழ்க்கை சகலருக்கும் கிடைப்பது அரிது. சுவாமியைப்போன்ற தூய்மையான, களங்கமற்ற உள்ளத்துடன் இருந்தாலே இப்படியான அமைதியான வாழ்க்கையைப் பெறமுடியும்."

மேற்கண்டவாறு நேற்று மடலை நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாசாலை மண்டபத்தில் யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜிக்கு திவ்ய ஜீவனசங்க யாழ்ப்பாணக் கிளையினரால்அளிக்கப்பட்ட வரவேற்புபசாரத்தில் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் பாராட்டுரை வழங்குகையில் குறிப்பிட்டார்.

விழா ஆரம்பமாவதற்கு முன் சுவாமிஜி நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்திலிருந்து மேளவாத்தியங்களுடன் நல்லூர் கந்தசுவாமி கோவில்வீதிவழியாக விழா அரங்கிற்கு ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். வழி நெடுகிலும் மக்கள் பூரணகும்பம் வைத்து மலர் மாலையிட்டு சுவாமிஜியை வரவேற்றார்கள்.

மேற்படி கிளையின் தலைவரான இளைப்பாறிய நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் சங்க இணைக் காரியதரிசியான திரு. எஸ். கனகரத்தினம் வரவேற்புப் பாவை வாசித்து சுவாமிஜிக்கு வழங்கினார்.

திரு. கே. பி. ஹரன் பாராட்டுரை வழங்குகையில் நமது நாட்டிலிருந்து வெளிநாடுசென்று தமிழினதும், இந்து சமயத்தினதும் புகழைப்பரப்பிய முதல்வர் சுவாமிஜியேயென்றும். மேலைத்தேசங்களிலெல்லாம் இந்துசமயத்தின் சிறப்பை தமது சொற்பொழிவு மூலமும், பஜனைகள் மூலமும் பரப்பிய சுவாமிஜியின் சேவை பாராட்டப்படத்தக்கதே என்றும் குறிப்பிட்டார்.

செல்வி இராஜலட்சுமி பேசுகையில்ஒன்றே இறைவன் ஒருவனேதேவன் என்ற கொள்கையையே சுவாமிஜி கடைப்பிடிப்பவர் எனத் தெரிவித்தார்.

தமக்களிக்கப்பட்ட வரவேற்புக்கு சுவாமிஜி நன்றி தெரிவித்துப் பேசினர்.

[ந. நி.]

கொழும்பு, வியாழன்

யாழ்ப்பாணத்தில் முட்டைக்குத் தட்டுப்பாடுநிலவி வருவதைத் தொடர்ந்துவிற்பனைப்பகுதி இலாகா யாழ்ப் [illegible] அனுப்பியுள்ளது,

### சிக்காகோ நர்ஸ்கள்கொலை

## 'எதிரி ரிவோல்வருடனும் கத்தியுடனும்காணப்பட்டார்'

### ஆயுத பொலிஸ் காவலுடன் விசாரணை ஆரம்பம்

பிரியோரியா, இல்லினொஸ், ஏப்ரல் 5

இந் நூற்றுண்டிலேயே பயங்கரமான கொலைகளில் ஒன்றென வர்ணிக்கப்படும் 'சிக்காகோநர்ஸ்கள்கொலை' வழக்கின் விசாரணை இங்கு ஆரம்பமாகியுள்ளது. சிக்காகோ ஆஸ்பத்திரியொன்றில் கடமையாற்றிய எட்டு நர்ஸ்களைப் படுகொலை செய்த குற்றத்துக்காக ரிச்சார்ட் ஸ்பெக் என்பவன் கைது செய்யப்பட்டது தெரிந்ததே. நர்ஸ்கள் எண்மரையும் படுக்கையறையில் வைத்துப் படுக்கை விரிப்பின் துண்டுகளால் கட்டிப் போட்டுவிட்டு, பின்னர் ஒவ்வொருவராக அறைக்கு வெளியே கொண்டுசெல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர். இச்சம்பவம் சிக்காகோ நர்ஸ்கள் விடுதியொன்றில் சென்ற வருடம் ஜூலை 13,14-ம் திகதிகளில் நடைபெற்றது. முன்னுள் கடற்தொழிலாளியான ரிச்சார்ட் ஸ்பெக்கின் வயது 25ஆகும்.

இவ்வழக்கை நடத்தும் வழக்கறிஞர் திரு. வில்லியம் மார்டின், விசாரணையில் தமது வாதத்தை எடுத்துரைக்கையில், பிலிப்பைன்ஸைச் சேர்ந்த 25 வயது நர்ஸான செல்வி கொராஸன் அமுராவோ என்பவர், சப்பவம் நடந்ததன்றிரவு 11 மணியளவில் தூக்கத்திலிருந்து கதவு தட்டப்பட்டு விழித்ததாகவும், கதவைத் திறந்தபோது ரிச்சார்ட் ஸ்பெக் ஒரு கறுத்த ரிவோல்வருடன் நின்றதைக் கண்டதாகவும் நிரூபிக்கச் சாட்சியங்கள் இருப்பதாகக் கூறினார்.

செல்வி அமுராவோவும், மற்ற நர்ஸ்களும் எதிரியினல் அறையில் நிலத்தில் இருக்கும்படி உத்தரவிடப்பட்டதாகவும், அவர்களிடம் அவன்பணம்கேட்டதாகவும், கைகளையும் கால்களையும் படுக்கை விரிப்புத் துண்டுகளால் கட்டியதாகவும், பின்னர் ஒவ்வொருவராக வெளியே கொண்டு செல்லப்பட்டுக் கொலை செய்யப்பட்டதாகவும் திரு. வில்லியம் மார்டின் மேலும் கூறினர்.

எதிரி வெளியே சென்றபோது, செல்வி அமுராவோ மட்டும் உருண்டுசென்று ஒரு கட்டிலின் கீழ் ஒளித்துக்கொண்டதாகவும், மூன்று மணித்தியாலம் கடந்த பிறகே அவர் தமது கைகளிலிருந்த முடிச்சை அவிழ்த்துக்கொண்டு அறையை விட்டேகி ஜன்னலடிக்குச்சென்று குளறியதாகவும் வழக்கறிஞர் திரு. மார்டின் தெரிவித்தார்.

வழக்கறிஞர் திரு. மார்டின் எதிரியைக் குற்றவாளியாகக் கண்டு, மின்சாரக் கதிரைக்கு அனுப்புமாறு ஜூரிசபையைக் கேட்டுக்கொண்டார்.

எதிரியின் வழக்கறிஞர் திரு. ஜெரால்ட் கெற்றி எதிரி சம்பந்தப்பட்ட நர்ஸ்களைக் கொலைசெய்ததை யாரும் நேரில் காணவில்லையெனவும், கொலைக்குற்றம் அவரால் செய்யப்படவில்லையென்பதே தமது வாதமென்றும், அவர்தான் கொலைகளைச் செய்தார் என்பதை அரசாங்கதரப்பினர் எவ்வித சந்தேகத்துக்குமிடமின்றி நிரூபிக்கவேண்டுமெனவும் கூறினர்.

கொலைச்சம்பவம் நடைபெற்ற இடமான சிக்காகோவிலே வழக்கை நடாத்திஞல், நியாயமானதாக அது அமையாதெனஎதிரி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபம் தெரிவித்ததைத் தொடர்ந்தே, இவ்வழக்கு இப்போது சிக்காகோவில் இருந்து 160 மைல் தொலைவிலுள்ள இல்லினொஸ் ராஜ்யத்தில் நடைபெறுகிறது.

கொலைச்சம்பவம் நடைபெற்ற அன்று, சம்பவம் நடந்த இடத்திலிருந்து 2 மைல் தூரத்திலுள்ள உணவுவிடுதியொன்றில் எதிரி ரிச்சார்ட் ஸ்பெக்கை ரிவோல்வருடனும், பேனுக்கத்தியுடனும் கண்டதாக மூன்று சாட்சியங்கள் விசாரணையின் இரண்டாவது தினமாகிய நேற்று கோர்ட்டில் தெரிவித்தனர்.

இவ்வழக்குக்கான ஜூரி சபை, பல வாரங்களாக நடந்த தேர்வுக்குப்பின் தேர்ந்தெடுக்கப்பட்டது. இச்சபையில் ஏழு ஆண்களும், ஐந்து பெண்களும் அங்கம்வகிக்கின்றனர். வழக்கு முடியப் பல வாரங்கள் செல்லுமென எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் வழக்கு ஆரம்பமாகியபோது, கோர்ட்டுக்கு வெளியே ஆயுதந்தாங்கிய பொலிசார் காவல்புரிந்தனர்.

### சுப்ரீம்கோர்ட்டிற்கு தாக்கல்

வல்வெட்டித்துறை, வியாழன்

கரவெட்டி கிழக்கைச் சேர்ந்ததம்புஏரம்பமூர்த்தி, தம்பு தியாகராசா ஆகிய இருவரும் அதே இடத்தைச் சேர்ந்த குமார் வல்லிபுரத்திற்கு கடந்த வருடம் ஆவணி மாதம் 25-ந் திகதி வயிற்றில் குத்திக் கொலை செய்ய எத்தனித்ததாக பருத்தித்துறை பொலிஸாரால் குற்றம்சாட்டித் தொடரப்பட்ட வழக்கு மாஜிஸ்டிரேட் திரு. கே. விக்னராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

சார்ஜண்ட் பி. எஸ். அருளானந்தம், கான்ஸ்டபிள் சரவணமுத்து ஆகியோர் சாட்சியமளித்தபின் மாஜிஸ்டிரேட் வழக்கை சுப்ரீம் கோர்ட்டிற்கு பாரப்படுத்தியுள்ளார்.

### பார்லிமெண்ட் ஸ்தானம் அதிகரிப்பு

கொழும்பு, வியா.

அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் ஜனப்பிரதிநிதிகள் சபையின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கக் கூடியமுறையில் பார்லிமெண்ட் தொகுதிகள் விஸ்தரிக்கப்படக்கூடுமென்று அறியப்படுகிறது.

151 தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர்களையும் கவர்னர் ஜெனரல் நியமிக்கும் ஆறு அங்கத்தவர்களையும் கொண்ட 157 அங்கத்தவர்களையுடைய ஜனப்பிரதிநிதிகள் சபை மேலும் விஸ்தரிக்கப்படவிருக்கிறது. அடுத்த வருடம் புதிய தொகுதி நிர்ணயக் கமிஷன் நியமிக்கப்படக்கூடுமென எதிர்பார்க்கப்படுகிறது

### மிளகாய் உற்பத்தி

புன்னலைக்கட்டுவன், வியா.

இலங்கை முழுவதிலும் ஆங்காங்கு தெரிவுசெய்யப்பட்ட 150 பாடசாலைகளில் மிளகாய் உற்பத்தி நடைபெறும். இதற்கான மிளகாய் விதை, விஞ்ஞானரீதியாகத தயாரிக்கப்பட்ட பசளை வகைகள் விநியோகிக்கப்படுகின்றன. இவற்றுக்கான பாத்திகட்டுதல், நீர்பாய்ச்சுதல், உரமிடுதல் ஆகிய கட்டளைகள் விவசாய ஆசிரியருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விஞ்ஞான ஆசிரியர் திடீர் இடமாற்றம்

## இராமநாதன் கல்லூரி மாணவிகள் கஷ்டம்

யாழ்ப்பாணம், வியா.

சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் கடமையாற்றிய விஞ்ஞான ஆசிரியர் திரு. ஆர். வல்லிபுரம், வருடத்தின் நடுவில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதால் அங்கு விஞ்ஞான வகுப்பில் பயிலும் 229 மாணவிகள் பாதிக்கப் பட்டிருப்பதுடன் விஞ்ஞான வகுப்புகளை மூட வேண்டிய நிலைமையும் உருவாகியுள்ளதாம்.

இதுசம்பந்தமாகக் கல்லூரி அதிபர் செல்வி பி. கனகசபை, பெற்றோர்-ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. ரி. முருகேசம்பிள்ளை, விஞ்ஞான ஆசிரியர் திரு. ஆர். வல்லிபுரம் ஆகியோர் இந்த இடமாற்றத்தை ரத்துச்செய்யும்படி வடமாநில வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினத்திடம் கோரியுள்ளனர்.

இராமநாதன் கல்லூரியின் 55 வருட காலத்தில் விஞ்ஞான ஆசிரியர் நியமிக்கப்பட்டபின் முதன்முதலாக இவ்வருடம் ஒரு மாணவி மருத்துவப் பகுதிக்கு 4 பாடங்களில் சித்தியடைந்துள்ளார். கடந்த இரு வருடங்களாக, விஞ்ஞானவகுப்பில் சேரும் ஆர்வம் மாணவிகளிடம் அதிகரித்துள்ளது.

விஞ்ஞான ஆசிரியரான திரு. வல்லிபுரம், 15 வருடங்களாகத் தென்னிலங்கையில் கடமையாற்றிய பின் தனது சொந்த ஊரான உடுப்பிட்டியிலுள்ள பாடசாலை ஒன்றில் கடமையாற்ற விரும்பியபொழுது இராமநாதன் கல்லூரிப் பெற்றோர் ஆசிரியர் சங்கமும், முன்னாள் வித்தியாதிபதி திரு. தணிகாசலமும் எடுத்த முயற்சியால் அவர், இராமநாதன் கல்லூரியில் நியமிக்கப்பட்டாராம்.

இவ்விஷயமாக இன்று வடமாநில வித்தியாதிபதி இறுதி முடிவு எடுப்பாரென அறியப்படுகிறது.

வட பகுதியிலுள்ள பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களை, குறிப்பாக விஞ்ஞான ஆசிரியர்களை, வருடத்தின் நடுவில் இடமாற்றம்செய்வதால் மாணவர்கள் அதிகம் பாதிக்கப்படுகிறார்களென்றும் இப்படியான இடமாற்றங்கள் தவிர்க்கப்படவேண்டுமென்றும் பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

### கையும் மெய்யுமாக அகப்பட்டான்

இமையாணன், வியா.

நகைப்பெட்டியைத் திருடிய திருடன் ஒருவனை உடனடியாகப் பிடித்த சம்பவம் ஒன்று கடந்த இரவு சுமார் 12 மணியளவில் உடுப்பிட்டியில் நிகழ்ந்துள்ளது.

உடுப்பிட்டியில் சி. குணரத்தினம் என்பவருடைய வீட்டில், வாட்டசாட்டமான ஓர் இளம் திருடன் புகுந்து, அவர்கள் நகைகளை வைக்கும் பெட்டியைத் திருடி ஓட்டம் பிடித்தான். அப்பொழுது அவ்வீட்டில் படுத்திருந்தவர்கள் கூக்குரலிட்டனர். அதைத் தொடர்ந்து அயலவர்கள் அத்திருடனைத் துரத்திப் பிடித்தனர். அதற்கிடையில் அத்திருடன் அந் நகைப்பெட்டியை வேறோர் இடத்தில் மறைத்து வைத்திருந்தானாம்.

இத் திருடன் இதற்கு முதல் இதே இரவு வேறும் இரண்டு வீட்டில் திருட முயன்றிருக்கின்றானென்றும் அவ் வீடுகளில் திருடுவதற்கு முன்னரே கலைக்கப்பட்டு, தப்பி ஓடினானென்றும்கூறப்படுகிறது. தற்பொழுது திருடன் பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளான்.

### புற்றுநோய் நிவாரண சங்கக் கூட்டம்

சுழிபுரம், வியா.

யாழ். மாவட்ட புற்றுநோய் நிவாரண சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இம்மாதம் 17-ம் திகதி செல்லமுத்து மண்டபத்தில் நடைபெறவிருக்கிறதுஇதில் இலங்கை புற்றுநோய்ச் சங்கப் பிரதிநிதிகள் உட்படப் பலபிரமுகர்கள் கலந்து கொள்ளவிருக்கின்றனர். புற்று நோய் கருத்தரங்கும் நடைபெறவிருக்கிறது.

### 13 ஆயிரம் கூப்பன் புத்தகம்

கொழும்பு, வியா

கடந்த டிசம்பர் மாதம் முதல் இவ்வருடம் ஜனவரி இறுதிவரை 13 ஆயிரம் கூப்பன் புத்தகங்கள் அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாக இன்று அறிவிக்கப்பட்டது.

### மீன் பிடியில் புதியமுறை

கொழும்பு, வியா.

மிரிச, கல்முனை ஆகிய இடங்களுக்கு புதிய முறையில் மீன்பிடிப்பதற்கு ஏற்ற ஒழுங்குகளை மீன்பிடிக்கூட்டு ஸ்தாபனம் ஒழுங்குசெய்துள்ளது. இத்திட்டம் மேற்கொள்ளப்பட்டதும் மீன்பிடி தொகை அதிகரிக்கும் என அறியப்பட்டுள்ளது.

### 1972ல் உள்ளூர் மருந்து

கொழும்பு, வியா.

இலங்கைக்குத் தேவையான மருந்துச் சரக்குகளில் 75 வீதத்தை 1972 ல் இங்கு தயாரிக்க முடியுமென்று அரசாங்கம் நம்புகிறது. இதனால் 4 கோடி ரூபாய் அந்நிய செலவாணி மிச்சப்படுத்தலாம்.

இது சம்பந்தமாக ஏழு பேர் கொண்ட ஒரு விசாரணைக் குழு விரைவில் அமைக்கப்படும்.

### வருடாந்த கூட்டம்

புன்னாலைக்கட்டுவன், வியா.

வலி.கிழக்குத் தமிழாசிரியர்சங்க வருடாந்தபொதுக் கூட்டம் இம் மாதம் 12-ந் திகதி முற்பகல் நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

இக் கூட்டத்தில் அகில இலங்கைத்தமிழாசிரியர்சங்கத் தலைவர் திரு. இ. கந்தையா, வித்தியாதரிசி திரு. ஏ.சிவகுரு ஆகியோரும் கலந்து கொள்வர்.

### பொருட்களின் தரம்பற்றிஎம்.பி.புகார்

காலி, வியாழன்

'பாவனையாளர்களை வியாபாரிகள் துன்புறுத்துகின்றனர். இதனை உடன் கவனிக்கவும் என்று பத்தகம பாராளுமன்ற உறுப்பினர் திரு. நிலே டி அல்விஸ் கைத்தொழில் மந்திரி திரு. பிலிப் குணவர்த்தனவிற்கு எழுதிய கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"உள்ளூர் கைத்தொழில் நிலையங்களிலிருந்து பாவனைக்கு உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தற்பொழுது மிகவும் குறைக்கப்பட்டுள்ளது ஆனால் விலைகள் அதே நிலையில் தான் இருக்கின்றது. இவற்றையும் விட பல பொருட்கள் நிறைகளிலும், எண்ணிக்கைகளிலும் குறைந்துள்ளது. இதனை உடன் கவனிக்கவும்.'.

### விடுமுறை வகுப்புகள்

புன்னாலைக்கட்டுவன், வியா.

பொதுத் தராதரப்பத்திர சாதாரண, உயர்தர வகுப்புளில் சைவசமயம் போதிக்கும் சைவ ஆசிரியருக்கான விடுமுறை காலப் பயிற்சி வகுப்புகள் இம்மாதம் 29-ம் 30-ம் திகதிகளில் யாழ். இந்துக்கல்லூரியில் நடைபெறுமென்று யாழ். கல்விக் காரியாலயம் பாடசாலை அதிபர்களுக்கு அறிவித்துள்ளது.

பயிற்சிமுடிவில் சான்றுப் பத்திரங்களும் வழங்கப்படும்.

### பிரயாணிகள் வீடுதிரும்பினர்

பண்டைத்தரிப்பு, வியா.

இரண்டரை மூன்று மணித்தியாலங்களாக பஸ்ஸைக் காத்து இறுதியில் வீடுதிரும்ப வேண்டிய நிலை இங்குள்ள பிரயாணிகளுக்கு எற்பட்டது. இளவாலை பிரதான சந்தியில் பஸ்ஸை காத்து நின்ற பாடசாலைப்பிள்ளைகளும், உத்தியோகத்தர்களுமே இக் கஷ்டத்திற்குள்ளானார்கள். இது இங்குள்ள பஸ் பிரயாணிகளுக்கு முதல் தடவையல்ல முன்பும் பல முறை இது நடை

## 'தொழிற் கல்வியே இப்போதைய தேவை'

சுழிபுரம், வியாழன்

"இன்று நாட்டுக்குத் தேவையான கல்வி தொழில் கல்வியேயாகும். தொழிற் கல்வியினால் மட்டுமே வருங்காலம் சிறப்படையும். ஆதலால் மாணவர்களுக்கு தொழிற்கல்வியை ஊட்ட ஆசிரியர்கள் அதிகம் முயல வேண்டும். ஆசிரியர்கள் தங்கள் தராதரத்தை உயர்த்திக்கொள்வதன்மூலம்மாணவர்களுக்கு நல்ல கல்வியைப் புகட்டுவதுடன் அதிக பலனையும் பெற்றுக்கொள்ளலாம்."

இவ்வாறு வட்டுக்கோட்டை வட்டார ஆசிரியர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வடபெரும்பாக வித்தியாதிபதி திருமதி ஆர். ஆர். நவரத்தினம் எடுத்துக்கூறினார்.

பண்ணாகம் மெய்கண்டான் உயர்தர பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு வட்டார கல்வியதிகாரி திரு. ச. சபாபதி தலைமை வகித்தார். பண்டத்தரிப்பு இந்துக்கல்லூரி ஆசிரியர் திரு. கி. வயிரமுத்து வரவேற்புரை நிகழ்த்தினார். வித்தியாதிபதி திருமதி நவரத்தினம் தொடர்ந்து பேசுகையில், விஞ்ஞானத்துடன் ஒட்டியதான பொது அறிவுக் கல்வியை கற்பித்தல்வேண்டும். அத்துடன் ஆசிரியர்கள் நிதானமாகவும் அவதானமாகவும் கல்விபுகட்டவேண்டும் எனவும் கூறினார். திரு. எஸ். சுப்பிரமணியம் நன்றியுரை கூறினார்.

பெற்றதென்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கைப் பிரதமர் திட்டத்தைச் சமர்ப்பிப்பார்

கொழும்பு, வியாழன்

வியட்னாம் தகராறுகளில் சமரசம் ஏற்படுத்தி வைப்பதற்கு இலங்கைப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கொண்டிருக்கும் திட்டத்தை, யுதாண்ட் இம்மாதம் 8ந் தேதி இலங்கைக்கு விஜயம் செய்யும்போது அவர் யுதாண்டிடம் சமர்ப்பிக்கவிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வியட்னாம் பிரச்னை முற்றிலும் உள்நாட்டுப் பிரச்னை. அதனை அந்நாட்டு மக்களே தீர்த்துக் கொள்ளவேண்டும் என்ற அடிப்படையில் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா அபிப்பிராயம் கொண்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.




லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர். மேற்கு ஐரோப்பாவின் மிகப்பெரிய அதி பிரசித்த பால் தயாரிப்புத் தொழிற்சாலையிலிருந்து வருகிறது; ஹாலந்தின் அதிகபட்ச அபிமானம் மிகுந்த இதில் 28 சத விகிதம் பாற் கொழுப்பும் 26.7 சத விகிதம் புரதச் சத்தும் உண்டு.

லீட்டா பூரண ஆடைப் பால் பவுடர், உண்மையான "முதற்தர" பூரண ஆடைப்பால் தர வேண்டிய அனைத்தையும் தருகிறது; இருந்தும், வேறெந்த ரகப் பவுடரையும் விடக் குறைவான நியாய விலையில் உங்களுக்குக் கிடைக்கிறது.

ஏக விநியோகஸ்தர்கள்

மில்லர்ஸ்

லிமிட்டெட்.

GRANT-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராஜா RAJAH
யாழ்ப்பாணம் JAFFNA
தினசரி 2-30, 6-30, 9-45
போயாதினங்களில் 4காட்சிகள்
எஸ். எஸ். ஆர் -விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி

நியூ காலிங்கன்
[இணுவில்]
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறைதினங்களில் 2-30
எஸ். எஸ். ஆர்.
நடித்த
தலைகொடுத்தான் தம்பி

## ஆசிரியர் தோல்வி

வல்வெட்டித்துறை, வியா.

சிதம்பராக் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்கும் மாணவர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் மாணவர் 1-2 புள்ளிகளால் ஆசிரியரைத் தோற்கடித்தனர். இப்போட்டிக்கு வல்வை பட்டினசபைத் தலைவர் திரு. வி. எம். இரத்தினவடிவேலு மத்தியஸ்தம் வகித்தார்.

7-4-67 முதல்
ஈஸ்வரன்
[கிளிநொச்சி]
தினசரி 6-30, 9-30
எஸ். எஸ். ஆர் -விஜயகுமாரி
நடித்த
ஆனந்தி 1727

இன்று முதல்
மனோஹரா
[யாழ்ப்பாணம்]
தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும்
போயா தினங்களிலும் விடுமுறை நாட்களிலும்
4 காட்சிகள்
எம். கே. ராதா-புஷ்பவல்லி
ஸ்ரீராம், வனஜா,
ரி. ஆர். ராமச்சந்திரன்,
மாஸ்டர் சேது, சுந்தரிபாய்
நடித்த
புத்தம்புதிய கொப்பி




ஜெமினி சித்திரம்

3-வது வெற்றி வாரம்
கெப்பிட்டல் [கொழும்பு] பிளாஸா [வெள்ளவத்தை] நவா [கொம்பனித்தெரு]
வெம்பிளி [கண்டி] மொடேன் [பதுளை] நியூசினிமா [குருணகலை]
விஜயா [மட்டக்களப்பு] ஸ்ரீகிருஷ்ண [திருமலை]
இன்றுமுதல்
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
சோதனைச் சுழலிலே சோதரர் இருவர்!
வேதனை விழிம்பிலே மாதர்கள் இருவர்!!
ஆண்டவனுக்கு சவால் விட்டான் ஒருவன்!
அண்ணனையே தடுமாறவைத்தான் ஒருவன்!!
கள்வனைக் காதலித்தாள் ஒருவள்!!
ஜெய்சங்கர் — எல். விஜயலக்ஷ்மி
மனோகர், அசோகன், வசந்தா,
தங்கவேலு, மனோரமா, கருணாநிதி
மற்றும் பலர் நடிக்கும்
இரு வல்லவர்கள்

கழக லீக் சுற்றுப் போட்டி

# புனித வளன் கழகம் பிரிவு சாம்பியனாக தெரிவு

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் உதைபந்தாட்ட விளையாட்டுச்சங்கத்தின் ஆதரவில் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கழகங்களுக்கிடையேயான லீக்சுற்றுப்போட்டியில் 'ஏ' பிரிவில் இதுவரை நடைபெற்ற போட்டிகளின் புள்ளிவிபரங்களின்படி புனிதவளன் விளையாட்டுக்கழகம் பிரிவுச் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. புனித வளன் கோஷ்டிக்கும் குருநகர் பாடும்மீன் கோஷ்டிக்கும் இடையே நடைபெற்ற இறுதிப்போட்டியில் புனித வளன் கோஷ்டியினர் 2—0 கோல்களால் பாடும்மீன் கோஷ்டியினரைத் தோற்கடித்தனர். இதுவரை நடைபெற்றுமுடிந்த சில போட்டி முடிவுகள் வருமாறு:—

**முதலாம் பகுதி ஆட்ட முடிவுகள்**

குருநகர் ஐக்கியவிளையாட்டுக்கழகத்துக்கும் சென். நிக்கலஸ் விளையாட்டுக் கழகத்துக்குமிடையேநடைபெற்ற போட்டியில் குருநகர் கோஷ்டி 4—0 கோல்களால் சென். நிக்கலஸ் கோஷ்டியை வென்றது.

கிறீன்பீல்ட்கோஷ்டிக்கும் நாவாந்துறை சென். மேரிஸ் 'ஏ' பிரிவுக் கோஷ்டிக்குமிடையே நடைபெற்றபெரும் மோதலில் நாவாந்துறை 2—1 கோல்களால் வென்றது.

ஒலிம்பிக் கோஷ்டிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற மோதலில் ஒலிம்பிக் கோஷ்டி 6—1 கோல்களால் அரியாலையை படுதோல்வியடையச் செய்தது.

ஜொலிஸ்ரார் கோஷ்டிக்கும் பாஷையூர் சென். அந்தனிஸ் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற போட்டியில் பாஷையூர் 2—1 கோலால் ஜொலிஸ்ரார் கோஷ்டியை வென்றது.

சென். நிக்கலஸ் கோஷ்டிக்கும் ஜொலிஸ்ரார் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற மோதலில் சென். நிக்கலஸ் 4—1 கோல்களால் எதிர்க் கோஷ்டியை வென்றது.

கிறீன்பீல்ட் விளையாட்டுக் கழகத்துக்கும் பாஷையூர் சென். அந்தனீஸ் கோஷ்டிக்கும் ஏற்பட்ட பெரும்மோதலில் கிறீன்பீல்ட்கோஷ்டி 3—2 கோல்களால் வென்றது.

குருநகர் ஐக்கியவிளையாட்டுக் கழகத்துக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்குமிடையேநடைபெற்ற போட்டியில்குருநகர் 2—1 கோலால் அரியாலையை வென்றது.

ஒலிம்பிக்கோஷ்டியும் ஜொலிஸ்ரார் கோஷ்டியும் மோதியபோட்டியில்ஜொலிஸ்ரார் கோஷ்டி 3—2கோல்களால்ஒலிம்பிக்கோஷ்டியை வென்றது.

நாவாந்துறை சென். மேரிஸ் கோஷ்டிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்றபோட்டியில் நாவாந்துறை 3—0 கோல்களால் அரியாலையைவென்றது.

கிறீன்பீல்ட் 'ஏ' பிரிவுக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்றபோட்டியில் கிறீன்பீல்ட் 3—2 கோல்களால் அரியாலையை வென்றது.

சென். நிக்கலஸ் கோஷ்டிக்கும் அரியாலை ஐக்கிய விளையாட்டுக் கழகத்துக்குமிடையே நடைபெற்ற போட்டி முடிவில் சமமான முடிவு ஏற்பட்டது.

குருநகர் ஐக்கிய விளையாட்டுக்கழகத்துக்கும்ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்துக்கும் ஏற்பட்ட மோதலில் ஒலிம்பிக் கோஷ்டி 4—2 கோல்களால் குருநகரை வென்றது.

பாஷையூர் சென். அந்தனீஸ்விளையாட்டுக்கழகத்துக்கும் ஒலிம்பிக் கோஷ்டிக்குமிடையேநடைபெற்ற ரசிப்பான போட்டியில் ஒலிம்பிக் கோஷ்டி 4—2 கோல்களால் வென்றது.

இப்போட்டிகள் யாவும் யாழ். விளையாட்டரங்கில் நடைபெற்றன.

## உத்தியோகமொழி மீறும் ஊழியர்

### எதிராக நடவடிக்கை

கொழும்பு, வியாழன்

அரசாங்கத்தின் உத்தியோக மொழிக் கொள்கையைமீறும் அரசாங்க ஊழியருக்கெதிராகப் பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்கள் மீது தக்கநடவடிக்கை எடுக்குமாறு உத்தியோக மொழி இலாகாவை நீதியமைச்சு கேட்டுள்ளது. இது தனிப்பட்ட அரசாங்க ஊழியருக்கு மட்டுமன்றி இலாகாக்கள், கூட்டுஸ்தாபனங்கள், உள்ளூராட்சி மன்றங்கள் ஆகியவற்றுக்கும் செல்லுபடியாகுமென நீதி அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

## பார்வையாளராக நியமனம்

கிளிநொச்சி, வியாழன்

கிளிநொச்சி கிராமமுன்னேற்றச்சங்கங்களின் சமாஜக் காரியதரிசி திரு. கே. பி. தம்பிராசாவும் திரு. இ. ரவுடேந்திரன் ஆகிய இருவரும் கிளிநொச்சி வைத்தியசாலையின் உத்தியோகப்பற்றற்ற பார்வையாளராகத் தொடர்ந்து இரு வருடங்களுக்குக் கடமையாற்ற சுகாதார அமைச்சினால் நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

## தற்காலிக நியமனம

கொழும்பு, புதன்

பொதுச்சேவைக் கமிஷன் திரு. இ. எல். அபயகுணவர்த்தனவை தற்காலிகபொலிஸ் அதிபராக நியமித்துள்ளது. திரு. ஜோன் அட்டிகல பொலிஸ் அதிபர் பதவியிலிருந்தும் ஓய்வு பெறுகிறார்.

REGAL - JAFFNA
Daily at 4-45, 7-00 9-45
Steve McQueen
James Garner
in
THE GREAT ESCAPE

## தேவை

சமையல்காரர்....

அனுபவமுள்ள சமையல்காரரும், சப்ளையரும் தேவை. நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் வரவும். ஹோட்டல் டீ' சொர்ண, 190, கே. கே. எஸ். ரோட் [முட்டாசுக்கடை சத்திக்கருகாமையில்], யாழ்ப்பாணம். 1687

விற்பனையாளர்

சில்லறை வியாபாரத்தில் அனுபவமும் திறமையும் உள்ள மணமாகாத விற்பனையாளர் தேவை. 15-4-67-ல் நேரில் வரவும். ப. ஜேம்ஸ், பிரதானவீதி, பண்டத்தரிப்பு. 1686

## விற்பனைக்கு

தையல் மெஷின்:

ஒரு கைப்பட பாவிக்கப்பட்ட ''சிங்கர்ஹைஸ்பீட்'' மெஷின் விற்பனைக்குண்டு. நேரில் பார்வையிடலாம். 180, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 1692

காணி:

கோண்டாவில் பலாலிரோட்டு சந்திக்கு அருகாமையில் உள்ள இருபாலை ரோட்டில் மாநகரசபை தண்ணீர் விநியோக ஸ்தாபனத்திற்கு எதிராக உள்ள இடத்தில் 20 பரப்புக் காணி கிணறு வசதிகளுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: அ. சி. செல்வத்துரை, நெட்டலப்பாய், கோண்டாவில் என்பவருடன் தொடர்பு கொள்ளவும். 2374

## காணவில்லை

பெண்:

காரைக்காடு சிவன்கோவிலில் தங்கிச் சிகிச்சை பெற்று வந்த எனது சகோதரி திருமதி குணமாலை விசாலாட்சியை 27-3-67 தொடக்கம் காணவில்லை. வயது சுமார் 35. பொது நிறம். சுமார் ஐந்து அடி உயரம். மேல் நெற்றியில் காயத்தின் வடு உண்டு. சிறிது புத்தி சுவாதீனமற்றவர். அதிகம் பேசமாட்டார். இவரைக் காணுபவர்கள் சமீபத்திய பொலிஸ் நிலையத்திற்கு அல்லது பராஜசிங்கம் சிவசுப்பிரமணியம், 5-ம் வட்டாரம், புங்குடுதீவு என்னும் விலாசத்துக்கு தயவு செய்து அறிவிக்கவும். 1693

## வாடகைக்கு

வீடு:

முல்லைத்தீவுப்பட்டினசபை கரைச்சிக் குடியிருப்பில் சகல நவீன வசதிகளுடன் [Water Service Water Sealed, latrines etc] 3 அறை புதிய வீடு வாடகைக்குக்கொடுக்க இருக்கிறது. விபரம்: சின்னத்துரை, 26, கரச்சிக் குடியிருப்பு, முல்லைத்தீவு. 1690

கலாரசிகர்களுக்கு ஓர்நற்செய்தி
ஈழத்தின் தலைசிறந்த கலைஞர்கள் ஒன்றுகூடி அளிக்கும்
மெல்லிசை இணைப்பு
மணியம் குழுவினர்
இவர்களை உங்கள் மங்கள வைபவங்கள்
திருவிழா உற்சவங்கள்
மற்றும்
கலைநிகழ்ச்சிகளுக்கும் அழைத்து இவர்களின் திறமையை
நேரில் காணுங்கள்
ஈழத்தில் எத்திசையிலும் இன்று புகழ்மாலை சூடிவரும்
பாடகர்கள்:
ஈழத்து ராஜா கே. சுந்தரராஜா
இசைச் செல்வி ஆர். மணிமேகலை
பின்னணி இசை அமைப்பு:
ஈழத்து ரசிகமக்களின் நல்லாசி பெற்ற
எக்கோடிய மாஸ்ரர்
எம். ஐ. சநூன் கோஷ்டியினர்
விபரங்களுக்கு:
S. T. S. மணியம், சுதுமலை.
இருப்பிடம்:
மணியம் குழுவினர்
467, சிவலிங்கப்புளியடி, கே. கே. எஸ். ரோட்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். 1732

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஜனப்பிரதிநிதிகள் சபையில்

# மொழி பெயர்ப்புக் குறைகளை நீக்க தமிழ் எம். பி. பிரேரணை

## ஹன்சார்ட்டில் 3 மொழிகளிலும் நிகழ்ச்சிகள் இடம்பெறகோரிக்கை

கொழும்பு, புதன்

**ஜனப்பிரதிநிதிகள் சபையில் தமிழில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு 'ஹன்சார்ட்' அறிக்கையிலும் அவை இடம்பெறச்செய்வதற்கும், சிங்களத்தில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் மொழிபெயர்க்கப்பட்டு ஹன்சார்ட்டில் இடம்பெறச்செய்வதற்கும்; ஆங்கிலத்தில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகள் தமிழிலும் சிங்களத்திலும் மொழிபெயர்க்கப்படுவதுடன் அவை ஹன்சார்ட்டில் இடம்பெறச்செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவேண்டுமென்று கிளிநொச்சி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் இன்று ஒரு பிரேரணையைக் கொண்டுவந்தார்**

இப்பிரேரணைமீது பண்டிதர் இரத்தினம் பேசுகையில், தமிழில் நிகழ்த்தப்படும் சொற்பொழிவுகளுக்கு சில சமயங்களில் சிங்களத்தில் மட்டும் பதில் அளிக்கப்படுகின்றது என்றும், அதனால் சிங்களம் தெரியாத தமிழ் அங்கத்தவர்கள் விளங்கிக்கொள்ளமுடியாமல் திண்டாட நேர்கிறதென்றும், அதுபோலவே தமிழில் கேட்கப்படும் கேள்விகளை தமிழ் தெரியாத அங்கத்தவர்களும் கஷ்டங்களுக்குள்ளாகிறார்கள் என்றும் கூறினார்.

சொற்பொழிவுகள் ஏககாலத்தில் மொழிபெயர்க்கப்பட்டு ஹன்சார்டிலும் அவை இடம்பெற்றால் ஜனப்பிரதிநிதிகள் சபை அங்கத்தவர்கள் எல்லோருமே அதைப் புரிந்துகொள்ளவும் பொதுமக்கள் சபை நிகழ்ச்சிகளைத் தெரிந்துகொள்ளவும் வசதியாய் இருக்குமென்றும் அவர் விளக்கினார்.

**ஜனநாயக உரிமை**

மட்டக்களப்பு எம். பி. திரு. சி. இராஜதுரை பேசுகையில், பார்லிமெண்டில் சொற்பொழிவுகள் இதர மொழிகளில் மொழிபெயர்க்கப்படுவது ஜனநாயக உரிமையாகுமென்றார். சொற்பொழிவுகள் மொழிபெயர்க்கப்பட்டால் சபையின் எல்லாப் பகுதியினரும் அவைகளைப் புரிந்துகொள்ள முடியுமென்றார்.

வவுனியா எம். பி. திரு. சிவசிதம்பரம் பேசுகையில், இந்தப் பிரேரணையில் சமஷ்டி வாடை வீசவில்லை. இப்படித்தான் ஐக்கியத்தை வளர்க்கமுடியும் என்றார்.

**ஆங்கிலத்தில் ஏன்?**

வலப்பனை எம். பி. திரு. ஹேரத்பேசுகையில், மொழிபெயர்ப்புகள் தமிழிலும், சிங்களத்லும் இருக்கவேண்டுமென்பது சரிதான் ஆனால் ஆங்கிலத்தில் ஏன் மொழி பெயர்க்கப்படவேண்டும் என்று கேட்கிறார்களென்பது தெரியவில்லை. இதன் காரணமாக இந்தப் பிரேரணையை ஆதரிக்க முடியாமல் இருக்கின்றது என்றார்.

அவர் தொடர்ந்து பேசுகையில், தமிழர்கள் சிங்களத்தையும், சிங்களவர்கள் தமிழையும் கற்கவேண்டும். சர்வகலாசாலைப் படிப்பு வரை பாடபோதனை தாய் மொழியில்தான் இருக்க வேண்டும். இருமொழிகளும் தேசிய பாஷைகள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கையில் ஆங்கிலத்தில் ஏன் மொழிபெயர்ப்புத் தேவை என்று கேட்கிறார்கள் என்றார்.

சபையின் [illegible] தால் மாலை 5-15-க்கு ஒத்தி வைக்கப்பட்டது.

---

**யாழ். மாநகரசபை நிர்வாகம்**

## மாஜி அங்கத்தவர்கள் மந்திரிக்குத் தந்தி

### விசாரணை செய்ய அதிகாரிகளை அனுப்ப வேண்டுமாம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாண மாநகரசபையின் விசேஷ ஆணையாளர் நிர்வாகத்தில் வரியிறுப்பாளரின் பணம் வீணாகச் செலவிடப்படுகிறதென்றும் நிர்வாக ஊழல்களுக்கு வேறு பல சான்றுகளிருப்பதாகவும் இக்குற்றச்சாட்டுகள் பற்றி விசாரணைசெய்ய அதிகாரிகள் குழுவொன்றை அனுப்பிவைக்கும்படியும் யாழ்ப்பாண மாநகரசபையின் முன்னாள் அங்கத்தவர்கள் ஆறுபேர் உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பி வைத்துள்ள ஒரு தந்தியில் கேட்டுள்ளனர்.

திருவாளர்கள் கே. வி. தெய்வேந்திரன், ஏ. ஜி. இராஜசூரியர், ஏ. நடராஜா, ஏ. அந்தனி, தா. ச. துரைராசா, த. கந்தையா, எம். எஸ். பேரின்பநாயகம் ஆகியோரின் கையொப்பத்துடன் அனுப்பியுள்ள இத் தந்தியில் விசேஷ ஆணையாளரின் நிர்வாகத்தில் மாநகரசபை ஊழியர் ஒருவரும் அவரது உறவினரான முன்னாள் மேயர் ஒருவரும் தலையிடுவதாகவும் குற்றம் சாட்டியிருக்கின்றனர்.

---

## '8-ம் திகதி தண்டனையை வாபஸ் பெறுக'

### யாழ். லிகிதர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், வியா.

'ஜனவரி 8-ந் திகதி நடைபெற்ற வேலைநிறுத்தத்தின் பயனாக பல அங்கத்தவர்கள் யாழ்ப்பாணத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டனர். இவ் இடமாற்றத்தினால் எங்கள் அங்கத்தவர்களுக்கு பல கஷ்டங்கள் ஏற்பட்டன. இவ்விஷயத்தை உள்நாட்டுமந்திரியுடன் பேசியதன் பயனாக எங்கள் அங்கத்தவர்கள் மீண்டும் வசதியான இடங்களுக்கு இடமாற்றம்செய்யப் பட்டனர் என அரசாங்க லிகிதர் சேவாசங்க யாழ். கிளையின் வருடாந்த அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விற்பனைஇலாகா மேலதிக நிலையமொன்றை நிறுவ இணங்கியதுபற்றியும், சிங்கள உத்தியோகத்தர்களுக்கு தமிழ்வகுப்புகள் ஒழுங்கு செய்ததுபற்றியும், புதிதாக நியமிக்கப்பட்ட சிங்கள ஊழியர்களுக்கு தகுந்த வேலைவழங்க மேற்கொண்ட நடவடிக்கைபற்றியும் இவ் வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாதம் 7-ந் திகதி வை. எம். சி. ஏ. கட்டடத்தில் நடைபெறவிருக்கும் பொதுக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் பரிசிலனைக்கு வருகின்றன.

[illegible]துக்குமாஸ்தாசேவையிலுள்ளவர்கள் அடிப்படைச் சம்பளத்தை ரூபா 120 ஆகக்கூட்டும்படி கோருதல்.

8-ந்திகதி நடைபெற்ற வேலைநிறுத்தத்தின் காரணமாக விதிக்கப்பட்ட தண்டனைகளைவிலக்குவது:

வாரத்தில் 5நாள் வேலைத் திட்டத்தை அமுல்நடாத்துவது.

---

### வியட்னும் தகராறு

## பிரதமர் டட்லியின் புதிய சமரச முயற்சி

### ஹனேய் நகருக்கு றெபர்ட் போகிறார்

கொழும்பு, புதன்

வியட்னும் தகராறுகளில் சமரசம் ஏற்படுத்தி வைப்பதற்கு பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா புதிய முயற்சியொன்றை மேற்கொண்டுள்ளார்

தமது சமரச யோசனைகளைத் தெரிவிக்கும் வகையில் திரு. றெபர்ட் குணவர்தனவை பிரதம மந்திரி ஹனேய்க்கு அனுப்பியுள்ளார்.

வியட்னும் மக்களின் சுய நிர்ணய உரிமைகளை இலங்கை மதிக்கின்றது. வியட்னும் பிரச்சினை முற்றிலும் உள்நாட்டுப் பிரச்சினை அதனை அந்நாட்டு மக்களே தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் பிரதமர் தமது அலோசனைகளைத் தெரிவித்திருப்பதாகத் தெரிகின்றது.

இப்பிரச்சினையில் சம்பந்தப் பட்டுள்ள இரு தரப்பினரையும் சந்திக்கச் செய்து பிரச்சினைகளை பேசித் தீர்த்துக் கொள்வதற்கு உதவ இலங்கை தயாராய் இருப்பதாகவும் தமது ஆலோசனைகள் ஏற்றுக் கொள்ளப் பட்டால் இருதரப்பினரும் இலங்கையிலேயே சந்திக்க வசதி ஏற்படுத்த முடியும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

---

## இராணுவத்தி . . .

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

வல்வெட்டித் துறையில் நடந்த சம்பவம் பற்றி கடும் நடவடிக்கை எடுக்கப் படுமென்றும், இனிமேல் இப்படியான நிகழ்ச்சிகள் நடைபெருதெனவும் நிரந்தரக்காரியதரிசி தெரிவித்தார்.

அரசாங்கத்தின் ஒரு அங்கமான நகரசபைத் தலைவர் மீதும் கைவைக்க இராணுவத்தினர் துணிந்துவிட்டார்கள் என்றும், ஆரம்பித்திலேயே அரசாங்கம் இராணுவத்தினரைக் கட்டுப்படுத்தியிருந்தால் நிலைமை இவ்வளவுதூரம் வளர்ந்திருக்காது என்றும் பருத்தித்துறை எம். பி. நிரந்தரக் காரியதரிசியிடம் சுட்டிக்காட்டினார். ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனைக் கடிக்கும் நிலைமைக்கு இராணுவத்தினர் வந்துவிட்டனர் எனப் பருத்தித்துறை எம். பி. தெரிவித்தார்.

இராணுவ அதிகாரி ஒருவர் ஒரு பெண்மீது பலாத்காரம் பிரயோகிக்க முயன்றார் என்ற புகாரைத்தொடர்ந்தே, இராணுவத்தினர் தாக்குதலில் இறங்கியதாகவும், துப்பாக்கி சகிதம் வந்த இராணுவத்தினர் வழியில் கண்ட எல்லோரையும் தாக்கினர் என்றும் தெரியவருகிறது.

---

## அடுத்த ஆண்டு...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தாலும்கூட சம்பள உயர்வு பெறமாட்டார்கள் என்பதுடன் தாம் வகிக்கும் மேல் பதவி நிலையையும் இழக்க நேரிடும்.

அரசாங்க சேவைக் கமிஷன் அறிக்கையில் இந்தத் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

---

## மாவட்டசபை மசோதா

### மந்திரிகள் பரிசிலனை

கொழுமபு, புதன்

மாவட்ட சபைகள் மசோதா தயாரிக்கப்பட்டு கடந்த சில தினங்களாக மந்திரிகள் அதனை பரிசிலனை செய்ததாகவும் அறியப்படுகின்றது.

மசோதாவில் பல அம்சங்களை மந்திரிகள் ஏற்றுக்கொண்டதுடன் வேறு சிலவற்றில் கருத்துவேறுபாடு கொண்டதாகவும் தெரிகின்றது.

மாவட்ட சபைகள் மசோதாவை சட்ட தயாரிப்பாளர்களின் உதவியுடன் மறு பரிசிலனை செய்யும் படி உள்ளூராட்சி மந்திரி கேட்கப்பட்டிருப்பதாகவும் அறியப்படுகிறது.

---

### கைதான

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

சில வருடங்களுக்குமுன்னர் முன்னாள் அமைச்சர் ஒருவரின் மெய்காப்பாளராக இருக்கையில் குற்றச் சாட்டொன்றின் பேரில் வேலை நீக்கம் செய்யப்பட்டு கடந்த மாத இறுதியிலேயே மீண்டும் வேலைக்கு அமர்த்தப்பட்டார் என்று அறியப்படுகிறது. இது சம்பந்தமாக வடமாகாண பொலிஸ் சுப்பிரீண்டன் திரு. ஆர். சுந்தரலிங்கம் தொடர்ந்து விசாரணை செய்து வருகின்றார்.

[ந. நி]

---


## முகாமையாளர் தேவை

தகைமை - கனிஷ்டதராதரப்பத்திரத்துடன் கூட்டுறவுப் பயிற்சியும் விரும்பத்தக்கது.

பிணை:-

ரொக்கம் ரூ. 1000/-

முடிவு திகதி - 23-4-67.

விண்ணப்பதாரர்கள் 24-4-67 [திங்கட்கிழமை] காலை 10-30 மணிக்கு பண்டகசாலைக்கு நற்சாட்சிப் பத்திரத்துடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகம் கொடுக்கவும்.

இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

காரியதரிசி

கந்தரோடை ஐ. ப. சாலை,
சுன்னுகம். 1731


---

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாராக் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1967-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7-ம்திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org